**செய்தி வெளியீடு எண்: 48** **நாள்: 22.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

முயற்சி திருவினையாக்கும் என்பது ஆன்றோர் மொழி. பயிற்சி, திறன் வளர்க்கும் என்பது இன்றைய மொழி. பயிற்சி என்பது பணியினை மேம்படுத்துவதிலும், திறனை அதிகப்படுத்துவதிலும், அறிவை அகலப்படுத்துவதிலும், திறமைகளை வளர்ப்பதிலும், மனநிலையினை மாற்றுவதிலும், அரசு ஊழியர்களின் ஆற்றலை விரிவுபடுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.

ஒவ்வொரு பணியாளரும், அவர் பணியாற்றும் துறையில் பின்பற்றப்படும் நடைமுறைகள் பற்றியும், அந்தத் துறைக்கான சட்ட திட்டங்கள், அந்தத் துறையின் மூலம் மக்களுக்காக அமல்படுத்தப்படும் நலவாழ்வுத் திட்டங்கள் போன்ற பல்வேறு விவரங்கள் பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும். இதற்காக, ஒவ்வொரு துறையிலும் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு உதவுகின்ற வகையில் பல்வேறு பயிற்சித் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் பணியாற்றுகின்ற கிராம நிருவாக அலுவலர்களின் பணித்திறன் மேம்பாடு உடையதாக இருக்க வேண்டும். எனவே, கிராம நிருவாக அலுவலர்களுக்கு, அவர்கள் தங்கள் பணிகளை சிறப்பாக செயலாற்றுவதற்கு வசதியாக, அவர்களுக்கு கிராம நிர்வாகப் பயிற்சி மற்றும் நில அளவைத் தொடர்பான பயிற்சிகள் அளிப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, சமீபத்தில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட சுமார் 4,615 கிராம நிருவாக அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு வசதியாக அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 118 பயிற்சி மையங்களை ஏற்படுத்துவதற்கும், பயிற்சி மையங்களுக்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் இதர செலவினங்களுக்காக 1 கோடியே 3 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கை மூலம் கிராம நிருவாக அலுவலர்கள் உரிய பயிற்சியினை பெற்று, கிராம நிர்வாகம் திறம்பட இயங்குவதற்கு வழிவகை வகுக்கும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 22.1.2013